# ஆய்வுக் களஞ்சியம்




பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை


லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ரிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா. ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூப | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# சிறுகதைகள்

கோமதி,
பகுதி நேர ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

**முன்னுரை :**

சிறுகதை என்பது சுருக்கமான கதை கூறும் வுனைவு வகை உரைநடை இலக்கியமாகும். ஒரு நிகழ்ச்சியின் அனுபவத்தை விவரிக்கும் இலக்கிய வகையாகும். சிறுகதை என்பது புதினம் மற்றும் நாவலை விட சுருக்கமானதாகும்.

**எழுதும் முறை :**

சிறுகதை எழுதுபவர்கள் தங்கள் கதையையோ கதாபாத்திரத்தையோ முதலில் தேர்ந்து எடுத்துக் கொண்டு அதற்கு ஏற்ப நிகழ்வுகளை படைத்துக் கொள்ளலாம்.

பாத்திரங்களைப் படைக்கும் போது படிப்போர் கற்பனை உள்ளத்தில் உண்மை போல் தோன்றும் படி படைத்தல் வேண்டும்.

பாத்திரங்களைப் படைக்கும் பொழுது படிப்போர் கற்பனை உள்ளத்தில் அவை உண்மைபோல் தோன்றும் படி படைத்தல் வேண்டும்.

கதையாசிரியர் சிலர் எழும் கதைகளில் இலக்கிய மணம் வீசுகிறது. பொதுமக்கள் அதிகமாக ஆசைபடாமல் தம்மை அறிந்து வாசித்து மகிழக்கூடிய மக்களுக்கு ஒத்ததாக மு. வரதராசன் அவர்கள் நடை அமைந்துள்ளது. அவர் எழுதிய விடுதலையா? முதலிய கதைகளை காணலாம். “கட்டாயம் வேண்டும் “ என்ற தலைப்பிலே வேலையின்மையும் வறுமையும் இருந்தும் பொறாமையும் எவ்வாறு ஒரு இளைஞனை தற்கொலைக்குத் தூண்டிவிட்டன என்ற கருத்து அழகாக அமைத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

**டாக்டர் மு. வரதராசன்**

மு.வ. எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு. வரதராசன் அவர்கள் 20-ம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள். ஆராய்ச்சி நூல்கள் போன்றவை மட்டுமின்றி சிறுகதைகள் புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகம் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் போன்றவற்றில் பணியாற்றியுள்ளார்.

**மு. வரதராசனாரின் எழுத்துப்பணி :**

நாவல்கள் சிறுகதைகள் நாடகங்கள் பயணக்கட்டுரை என 91 நூல்களை தமிழுக்கு தந்துள்ளார். மு.வ. தான் எழுதிய நூல்கள் பெரும்பாலானவற்றை தனது சொந்த நிறுவனமான தாயக வெளியீட்டின் வழியாக வெளியிட்டார்.

**மு.வ. பெற்ற விருதுகள் :**

மு.வ. – வின் அகல்விளக்கு எனும் நாவலுக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது. கள்ளோ காவியமோ அரசியல் அலைகள் மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்தது.

**வைரமுத்து :**

மனிதர்கள் முகங்களால் வேறுபட்டு இருப்பது போலவே எண்ணங்களாலும் வேறுபட்டிருக்கிறார்கள். அந்த எண்ண வேறுபாடுகளை எழுத்துத் தமிழில் நிறுத்திப் பார்க்க முயன்றிருக்கிறேன் என ஒரு சமூகத்தின் சுயசரிதையை “காவிநிறத்தில் ஒரு காதல்” என்ற கதையில் கூறுகிறார்.

**தமிழில் சிறுகதைகள் :**

தமிழ் சிறுகதை இலக்கியக்கலை என்பது கடந்த முப்பது ஆண்டுகளாக வளர்ந்து வருகிறது என்றாலும் அதற்கு வேண்டிய கரு முன்னை நாள் தொட்டு உண்டு எனலாம்.

1921 – வரை வாழ்ந்த பாரதியார் தான் சிறுகதை எழுத்தாளர்களுக்கு விடிவெள்ளியாய் இருந்தவர் என்று கூயலாம்.

சிறுகதையில் வருணனைகள் சிறிய அளவினதாக இருத்தல் வேண்டும். அவ்வருணனைகள் இன்ன ஊர் இன்ன இடம் இந்த ஆள் என்பதை பலப்படுத்தும் அளவிற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

பெரும்பான்மையான எழுத்தாளர்கள் சிறுகதையின் முடிவை கூறாமலேயே முடிக்கிறார்கள். வாசகர்களின் மனம் போல முடிவு தோன்றலாம் இது எழுத்தாளர்களின் சிறப்பு.

**முடிவுரை :**

சிறுகதையில் முடிவு இன்பமாக இருத்தல் வேண்டும் என்று பலரும் நினைக்கிறார்கள். துன்ப முடிவினாலேயே ஒரு கதை கலையழகுடையதாகி விடும் என்ற தப்பான கருத்து சிலரிடம் பரவியுள்ளது.

இக்காலத்தில் மக்கள் எதனையும் விரைந்து செய்ய விரும்புகின்றனர். அதனால் கதைகளை விரைந்து படித்து முடித்து விட

வேண்டும் என்ற எண்ணம் பலரிடத்திலும் பரவியுள்ளது. அதை நிறைவேற்றும் வகையில் சிறுகதைகள் குவிந்து கொண்டுள்ளன.

வெளி வரும் சிறுகதைகளில் பல பொருளற்றதாகவும் இலக்கணத்திற்கு பொருந்தாதனவாகவும் இருத்தல் வுடும். ஆனால் பல கதைகள் படிப்போரை மகிழ்விக்கும் நோக்கம் உடையனவாக உள்ளன.



அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்